செயலாற்றுகை அறிக்கை

2025

தேசிய பெறுகை ஆணைக்குழு
இல. 44, ஆர்.ஜி. சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 07
தொலைபேசி: 011-2665152, தொலைநகல்: 011-2665162, மின்னஞ்சல்:
sg@nprocom.gov.lk
இணையத்தளம்: www.nprocom.gov.lk

தவிசாளர் விடுக்கும் செய்தி

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் அத்தியாயம் XIXஆ இன் உறுப்புரை 156ஆ. (1) இன் கீழ், தேசிய பெறுகை ஆணைக்குழு (NPC) 2023, மே மாதத்தில் நிறுவப்பட்டது.

அரசியலமைப்பின் உறுப்புரை 156இ.(1) க்கு அமைய, அரச நிறுவனங்களால் பொருட்கள் மற்றும் சேவைகள், வேலைகள், ஆலோசனைச் சேவைகள் மற்றும் தகவல் முறைமைகளைக் பெறுகை செய்வதற்கான நியாயமான, சமமான, வெளிப்படைத்தன்மைவாய்ந்த, போட்டித்தன்மைவாய்ந்த மற்றும் கிரய பயனுள்ள நடைமுறைகளையும் வழிகாட்டுதல்களையும் வகுத்தமைக்கும் பணியை தேசிய பெறுகை ஆணைக்குழு மேற்கொள்ளும். பொதுப் பெறுகைகளின் மூலக்கோட்பாடுகளையும் நெறிமுறைகளையும் கடைப்பிடிப்பதை உறுதிசெய்ய தேசிய பெறுகை ஆணைக்குழு உறுதிபூண்டுள்ளது.

பெறுகை வழிகாட்டுதல்களையும் நடைமுறைகளையும் வகுத்தமைத்தல், இந்த வழிகாட்டுதல்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்வதற்காக பெறுகை செய்யும் நிறுவனங்களின் பெறுகை நடவடிக்கைகளைக் கண்காணித்தல் மற்றும் விசாரித்தல், அரச நிறுவனங்களின் பெறுகைத் திறனை மதிப்பிடுதல் மற்றும் பொதுப் பெறுகைகளில் திறன் மேம்பாட்டை வழங்குதல் ஆகியன தேசிய பெறுகை ஆணைக்குழுவின் வகிபாகத்திலும் பொறுப்புக்களிலும் அடங்கும்.

மேற்கண்ட பணிப்பாணையைப் பின்பற்றி, வரையறுத்த மனித மற்றும் பௌதிக வளங்கள் இருந்த போதிலும், 2025 ஆம் ஆண்டிற்கான இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு தேசிய பெறுகை ஆணைக்குழு குறிப்பிடத்தக்க பெறுபேறுகளை அடைந்துள்ளது. பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகளுக்கான பெறுகை வழிகாட்டுதல்கள்-2024, சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் தொடர்புடைய கையேட்டுடன் மூன்று(03) மொழிகளில் 2025.01.01 முதல் வெளியிடப்பட்டதும், மேலும் நாடுதழுவிய அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரச உயரதிகாரிகளுக்கு இந்த வழிகாட்டுதல்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டமையும் 2025 ஆம் ஆண்டில் எமது குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகும்.

ஆலோசனைச் சேவைகளுக்கான வழிகாட்டுதல்களும் முடிக்கப்பட்டு, 2026 ஆம் ஆண்டில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், நுகர்வுத்தன்மை கொண்ட மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்கள் மீதான வழிகாட்டுதல்களுக்காக பங்கீடுபாட்டாளர்கள் மற்றும் சரிபார்ப்புப் பயிலரங்குகள் நடத்தப்பட்டன. அதுமட்டுமின்றி, கொள்கை உருவாக்கம், கண்காணிப்பு மற்றும் விசாரணைப் பணிகள் முடிக்கப்பட்டு, அதன் முடிவுகள் தேவையான நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிக்கையிடப்பட்டுள்ளன.

பொதுத் துறை முழுவதும் நிறுவனத் திறனை வளர்க்கும் நோக்கில், இந்த ஆண்டில் நாடு தழுவிய பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்/பயிலரங்குகள், அத்துடன் பொதுப் பெறுகைகள் குறித்த பயிற்றுநர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் நடத்தப்பட்டன. சர்வதேச மற்றும் உள்ளூர் ஆலோசகர்களின் உதவியுடன் பெறுகைச் சட்டத்தை நிறைவு செய்வதில் தேசிய பெறுகை ஆணைக்குழு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. பொதுப் பெறுகைகளைக் கண்காணிப்பதில் ஒரு முக்கிய மைல்கல்லாக, தேசிய பெறுகை ஆணைக்குழு இணையவழி இலத்திரனியல் பெறுகைக் கண்காணிப்பு முறையை (EPMS) அறிமுகப்படுத்தியுள்ளது. ஆணைக்குழு, அமைச்சரவையின் வேண்டுகோளுக்கு இணங்க, அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பேரில் தனது கருத்துக்களையும் பரிந்துரைகளையும் தொடர்ந்து வழங்கி வருகிறது. 2025 ஆம் ஆண்டில் எட்டப்பட்ட செயலாற்றுகை மற்றும் அடைவுகள் குறித்த மேலதிக விவரங்கள் இந்தச் செயலாற்றுகை அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

இறுதியாக, தேசிய பெறுகை ஆணைக்குழுவின் செயலாற்றுகையை அடைவதில் தளராத ஆதரவையும் அர்ப்பணிப்பையும் வழங்கிய எனது சக ஆணைக்குழு உறுப்பினர்கள், செயலாளர் நாயகம், பணிப்பாளர்கள் மற்றும் பிற அனைத்து உயரதிகாரிகளுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுதர்மா கருணாரத்ன
தவிசாளர்
தேசிய பெறுகை ஆணைக்குழு
...........05.2026

பொருளடக்கம்

அத்தியாயம் 01 .... **Error! Bookmark not defined.**

நிறுவன தோற்றப்பாங்குகள்/நிர்வாகச் சுருக்கம் .... நுசசழச! டீழழமஅயசம ழெவ னநகiநென.

1.1 அறிமுகம் .... நுசசழச! டீழழமஅயசம ழெவ னநகiநென.

1.2 **ஆணைக்குழுவின் தொலைநோக்கும் பணிக்கூற்றும் குறிக்கோள்களும்**....... நுசசழச! டீழழமஅயசம ழெவ னநகiநென.

தொலைநோக்கு 6

பணித்திட்டம் 6

குறிக்கோள்கள் 6

1.3 **முக்கிய பணிகள்** .... நுசசழச! டீழழமஅயசம ழெவ னநகiநென.

1.4 நிறுவன இணைப்பாக்கம் **8**

1.5 **தேசிய பெறுகை ஆணைக்குழுவின் பிரிவுகள்** **9**

1.5.1 நிர்வாகப் பிரிவு 9

1.5.2 பெறுகைக் கொள்கைப் பிரிவு 9

1.5.3 பெறுகை கண்காணிப்புப் பிரிவு 10

1.5.4 பெறுகை விசாரணைப் பிரிவு 10

1.5.5 கணக்குப் பிரிவு 11

1.6 தேசிய பெறுகை ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்/ நிதிகள் **11**

1.7 வெளிநாட்டு நிதியளிப்புக் கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள் **11**

அத்தியாயம் 02 .... **Error! Bookmark not defined.**

முன்னேற்றமும் கண்ணோட்டமும் .... நுசசழச! டீழழமஅயசம ழெவ னநகiநென.

2.1 சிறப்பான அடைவுகளும் சவால்களும் எதிர்கால இலக்குகளும் **13**

2.1.1 மீளாய்வு ஆண்டில் மேற்கொண்ட செயற்பாடுகள் **நுசசழச! டீழழமஅயசம ழெவ னநகiநென.**

2.1.2 சிறப்பான அடைவுகள் .... **நுசசழச! டீழழமஅயசம ழெவ னநகiநென.**

2.1.3 சவால்கள் 23

அத்தியாயம் 03 25

முழுதுமளாவிய நிதிசார் செயலாற்றுகை **25**

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று **25**

3.2 நிதி நிலைக் கூற்று..**26**

3.3 காசுப்பாய்ச்சல் கூற்று **27**

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் **28**

3.5 வருமானத் திரட்டலில் செயலாற்றுகை .... நுசசழச! டீழழமஅயசம ழெவ னநகiநென.

3.6 ஒதுக்கப்பட்ட நிதிஒதுக்கீடுகளைப் பயன்படுத்திக்கொள்வதன் செயலாற்றுகை .... நுசசழச! டீழழமஅயசம ழெவ னநகiநென.

3.7 வேறு அமைச்சுக்களின்/திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் .... நுசசழச! டீழழமஅயசம ழெவ னநகiநென.

3.8 நிதியல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை ....நுசசழச! டீழழமஅயசம ழெவ னநகiநென.

3.9 கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை ..... நுசசழச! டீழழமஅயசம ழெவ னநகiநென.

அத்தியாயம் 04 30

செயலாற்றுகைக் குறிகாட்டிகள் 30

4.1 ஆணைக்குழுவின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (செயல் திட்டத்தின் அடிப்படையிலானது) . **30**

அத்தியாயம் 05 .... **Error! Bookmark not defined.**

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் செயலாற்றுகை **33**

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் **33**

5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் வெற்றிகளும் சவால்களும் **33**

அத்தியாயம் 06 36

மனித வள தோற்றப்பாங்குகள் **36**

6.1 gjtpapdu; Kfhikj;Jtk; **36**

6.2 ஆணைக்குழுவின் செயலாற்றுகை மீதான மனித வளப் பற்றாக்குறையின் தாக்கம் .... நுசசழச! டீழழமஅயசம ழெவ னநகiநென.

6.3 **மனித வள அபிவிருத்தி**.. நுசசழச! டீழழமஅயசம ழெவ னநகiநென.

உள்நாட்டு பயிற்சித் திட்டங்கள் 38

வெளிநாட்டு பயிற்சித் திட்டங்கள் 38

அத்தியாயம் 07 .... **நுசசழச! டீழழமஅயசம ழெவ னநகiநென.**0

இணக்க அறிக்கை .... நுசசழச! டீழழமஅயசம ழெவ னநகiநென.**0**

அத்தியாயம் 01

நிறுவன தோற்றப்பாங்குகள்/நிர்வாகச் சுருக்கம்

1.1 அறிமுகம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் அத்தியாயம் XIXஆ, இன் உறுப்புரை 156ஆ. (1) இன் கீழ் தேசிய பெறுகை ஆணைக்குழு (NPC) நிறுவப்பட்டு, 2023 மே மாதம் 29ஆம் திகதியன்று அதன் செயற்பாடுகளை ஆரம்பித்தது.

அரசியலமைப்பின் உறுப்புரை 156இ.(1) இன்படி, அரச நிறுவனங்களால் பொருட்கள் மற்றும் சேவைகள், வேலைகள், ஆலோசனைச் சேவைகள் மற்றும் தகவல் முறைமைகளை பெறுகைசெய்வதற்கான நியாயமான, சமமான, வெளிப்படைத்தன்மை வாய்ந்த, போட்டித்தன்மை வாய்ந்த மற்றும் கிரய பயனுள்ள நடைமுறைகளையும் வழிகாட்டுதல்களையும் வகுப்பதே தேசிய பெறுகை ஆணைக்குழுவின் பணியாகும்.

இப்பணிப்பாணையை நிறைவேற்றுவதற்காக, அனைத்து அரச நிறுவனங்களுக்கும் பொருந்தக்கூடிய பெறுகை வழிகாட்டுதல்களையும் நடைமுறைகளையும் வகுத்தமைப்பது தேசிய பெறுகை ஆணைக்குழுவின் பொறுப்பாகும். மேலும், இந்த ஆணைக்குழு இந்த நிறுவனங்களின் பெறுகைச் செயன்முறைகளைக் கண்காணித்து மீளாய்வு செய்து, அவற்றின் பெறுகைத் திறனை மதிப்பிட்டு, நிறுவனங்களின் பெறுகைத் திறன்களை வலுப்படுத்த திறன் அபிவிருத்தி முன்முயற்சிகளுக்கு உதவுகிறது. மேலும், அரச நிறுவனங்களின் பெறுகைச் செயல்திறன் குறித்து தேசிய பெறுகை ஆணைக்குழு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிக்கையிடுகிறது. இதன் மூலம் அனைத்து அரச நிறுவனங்களிலும் நிறுவப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகள் சீராகவும் திறம்படவும் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்கிறது.

தேசிய பெறுகை ஆணைக்குழு (NPC), பின்வரும் ஐந்து (05) உறுப்பினர்களைக் கொண்டுள்ளது:

பெயர்	பதவிநிலை
திருமதி சுதர்மா கருணாரத்ன	தவிசாளர்
திரு. ஐவன் திசேரா	உறுப்பினர்
திரு. டி.ஏ.பி.எஸ்.தரணாகம	உறுப்பினர்
திரு. எஸ்.சுமந்திரன்	உறுப்பினர்
கலாநிதி ஏ.ஜி.பி.அசங்க குணவங்ச	உறுப்பினர்

1.2 ஆணைக்குழுவின் தொலைநோக்கும் பணித்திட்டமும் குறிக்கோள்களும்

தொலைநோக்கு

தேசிய அபிவிருத்திக்கு வழிவகுக்கும் ஒரு பெறுகை முறைமை.

புணித்திட்டம்

அரச பெறுகையில் பணத்திற்கான மதிப்பை உறுதிசெய்வதற்காக தரப்படுத்துதல், கண்காணித்தல், விசாரணை செய்தல், அறிக்கை சமர்ப்பித்தல் ஆகியவற்றின் மூலம் பெறுகை முறையைச் செயல்படுத்துவதை எளிதாக்க வழிகாட்டுதல்களையும் நடைமுறைகளையும் உருவாக்குதல்.

குறிக்கோள்கள்

- பெறுகை மூலக்கோட்பாடுகளை உறுதிசெய்யும் அரச பெறுகை நடைமுறைகளையும் வழிகாட்டுதல்களையும் வகுத்தமைத்தல்.
- அரச பெறுகை வழிகாட்டுதல்களும் நடைமுறைகளும் பின்பற்றப்படுவதை உறுதிசெய்தல்.
- பயனுறுதிவாய்ந்த பெறுகைக் கண்காணிப்பு மற்றும் விசாரணைப் பொறிமுறையை நிறுவுதல்.
- பெறுகை தொடர்பில் அரச அதிகாரிகளின் இயல்திறனை விருத்திசெய்தல்.
- நாட்டிற்குள் அரச பெறுகை முறையைப் பலப்படுத்துதல்.

1.3 முக்கியப் பணிகள்

அரசியலமைப்பின் உறுப்புரை 156இ.(1) இற்கமைய, ஆணைக்குழுவுக்கு பின்வரும் முக்கிய பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

1. பெறுகை மூலக்கோட்பாடுகளுக்கு இணங்குவதை உறுதிசெய்வதற்காக, அரச நிறுவனங்களுக்கான பெறுகை நடைமுறைகளையும் வழிகாட்டுதல்களையும் வகுத்தமைத்தல்.

2. அரச நிறுவனங்களால் செய்யப்படும் பொருட்களும் சேவைகளும், வேலைகள், ஆலோசனைச் சேவைகள், தகவல் முறைமைகள் ஆகியவற்றின் அனைத்துப் பெறுகைகளும், முன்னர் அங்கீகரிக்கப்பட்ட செயல் திட்டங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டங்களின் அடிப்படையில் அமைவதை உறுதிசெய்வதற்காக, கண்காணித்து உரிய அதிகாரிகளுக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.

3. பொருட்கள் மற்றும் சேவைகள், வேலைகள், ஆலோசனைச் சேவைகள் மற்றும் தகவல் முறைமைகளை வழங்குவதற்கான தகுதிவாய்ந்த ஏலதாரர்கள் அனைவருக்கும் ஏலச் செயன்முறையில் பங்கேற்க சம வாய்ப்பு வழங்கப்படுவதை உறுதிசெய்ய, கண்காணித்து உரிய அதிகாரிகளுக்கு அறிக்கையிட வேண்டும்.

4. ஒப்பந்தக்காரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் ஒப்பந்தங்களை வழங்குவதற்கும் உள்ள நடைமுறைகள் நியாயமானதாகவும் வெளிப்படையானதாகவும் உள்ளதா என்பதை மதிப்பிடுவதற்கு கண்காணித்து உரிய அதிகாரிகளுக்கு அறிக்கையிட வேண்டும்.

5. அரச நிறுவனங்களால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் உறுப்பினர்கள் தகுந்த தகுதியுடன் இருப்பதை உறுதிசெய்ய, அவர்களின் தகுதிகள் குறித்து அறிக்கை அளிக்க வேண்டும்.

6. நிறுவப்பட்ட நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு வெளியே அரச நிறுவனங்களால் செய்யப்படும் பெறுகைகள் குறித்த அறிக்கைகளை விசாரித்து, அத்தகைய பெறுகைகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளைத் தேவையான நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.

7. தொடர் பயிற்சியின் மூலம் பெறுகை தொடர்பில் அரச அதிகாரிகளின் திறனை மேம்படுத்த வேண்டும்.

8. அரச பெறுகை தொடர்பான கொள்கைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

1.4 நிறுவன இணைப்பாக்கம்

பின்வரும் நிறுவன விளக்கப்படம், 2025 டிசம்பர் 31 அன்றுள்ளவாறான தேசிய பெறுகை ஆணைக்குழுவின் அனுமதிக்கப்பட்ட பணியாட்டொகுதி கட்டமைப்பை விளக்குகிறது.



2025.12.31 அன்றுள்ளவாறு அனுமதித்த பதவியினரின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது

1.5 தேசிய பெறுகை ஆணைக்குழுவின் பிரிவுகள்

ஆணைக்குழுவின் கீழ் பின்வரும் ஐந்து (05) பிரிவுகள் செயற்படுகின்றன:

1. நிர்வாகப் பிரிவு
2. பெறுகைக் கொள்கைப் பிரிவு
3. பெறுகைக் கண்காணிப்புப் பிரிவு
4. பெறுகை விசாரணைப் பிரிவு
5. கணக்குப் பிரிவு

1.5.1 நிர்வாகப் பிரிவு

நிர்வாகப் பிரிவானது, நிறுவனம் சார்ந்த விடயங்களைக் கண்காணிப்பதற்கும், தேசிய பெறுகை ஆணைக்குழுவின் (NPC) முக்கிய பணிகளைச் செயற்படுத்துவதற்காக ஏனைய பிரிவுகளுக்கு ஆதரவளிப்பதற்கும் பொறுப்பாகும். இப்பிரிவானது சனாதிபதி செயலகம், அமைச்சரவை அலுவலகம், பாராளுமன்றம், நிதி அமைச்சு உள்ளிட்ட முக்கிய அரச நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளும் முதன்மை ஒருங்கிணைப்பு அலகாகச் செயற்படுகிறது.

மேலும், நிர்வாகம் மற்றும் நிறுவனம் சார்ந்த விடயங்கள் தொடர்பான அறிக்கைகளை மீளாய்வு செய்து சமர்ப்பிப்பதற்கும், உரிய அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் இப்பிரிவு பொறுப்பு வகிக்கிறது. இப்பிரிவுக்கு பணிப்பாளர் (நிர்வாகம்) தலைமை தாங்குகிறார். இவர், பிரிவின் ஒப்படைக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதில் உத்திசார் தலைமைத்துவத்தையும் ஒட்டுமொத்த வழிகாட்டுதலையும் வழங்குகிறார்.

1.5.2 பெறுகைக் கொள்கைப் பிரிவு

பெறுகைக் கொள்கைப் பிரிவானது அரச பெறுகைக் கொள்கைகள், வழிகாட்டுதல்கள், நடைமுறைகள் மற்றும் தரநிலைகளை உருவாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும், அத்துடன் அவற்றின் செயலாக்கக் கட்டமைப்பைத் தயாரிப்பதற்கும் பொறுப்பாகும். இப்பிரிவு, பொது பெறுகை தொடர்பான கொள்கை சார்ந்த விடயங்களில் ஆணைக்குழுவுக்கு கருத்துக்களையும் பரிந்துரைகளையும் வழங்குகிறது. மேலும் கொள்கை வழிகாட்டுதல்கள் பெறுகை மூலக் கோட்பாடுகள் மற்றும் தேசிய நலன்களுடன் சீரமைக்கப்படுவதை உறுதிசெய்கிறது.

இதுதவிர இப்பிரிவு, அரசதுறை முழுவதும் இணக்கப் பண்பாட்டையும் சிறந்த பெறுகையையும் வளர்க்கும் நோக்கில், அரச நிறுவனங்களை இலக்காகக் கொண்ட இயல்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், பயிற்சி முன்முயற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் வடிவமைப்பு மற்றும் நிர்வாகத்தை மேற்பார்வை செய்கிறது. மேலும், அமைச்சரவையால் தேசிய பெறுகை ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும் அரச பெறுகைக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் குறித்த கருத்துக்களையும் பரிந்துரைகளையும் கொண்ட விரிவான அறிக்கைகளைத் தயாரிக்கும் பொறுப்பும் இப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரச நிறுவனங்களால் எழுப்பப்படும் பெறுகை தொடர்பான விடயங்களில் கொள்கை விளக்கங்கள், நிபுணத்துவ ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை வழங்குவதற்கான அதிகாரபூர்வ அலகாகவும் இது செயற்படுகிறது.

இப்பிரிவுக்கு பணிப்பாளர் (கொள்கை) தலைமை தாங்குகிறார். அவர், இப்பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதில் மூலோபாயத் தலைமையையும் ஒட்டுமொத்த வழிகாட்டுதலையும் வழங்குகிறார்.

1.5.3 பெறுகைக் கண்காணிப்புப் பிரிவு

பெறுகைக் கண்காணிப்புப் பிரிவானது, அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் பொருட்கள், வேலைகள், சேவைகள் மற்றும் தகவல் முறைமைகளின் பெறுகையைக் கண்காணிப்பதற்கும், முன்னர் அங்கீகரிக்கப்பட்ட செயல்திட்டங்களுக்கு இணங்க பெறுகைத் திட்டங்கள் கண்டிப்பாகப் பின்பற்றப்படுவதை உறுதிசெய்வதற்கும் பொறுப்பாகும். இப்பிரிவானது தனது காண்புகளை ஆணைக்குழுவுக்கும் பிற தொடர்புடைய அதிகாரிகளுக்கும் முறையாக ஆவணப்படுத்தி அறிக்கையிடுகிறது. இதன் மூலம் அரச பெறுகையில் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புடைமையையும் ஊக்குவிக்கிறது.

இதுதவிர, அனைத்து அரச நிறுவனங்களையும் உள்ளடக்கிய ஒரு விரிவான இலத்திரனியல் பெறுகைக் கண்காணிப்பு முறைமையை (ePMS) வடிவமைத்தல், நிறுவுதல், செயல்படுத்துதல் ஆகிய பொறுப்புக்களும் இப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், பெறுகை நிறுவனங்கள் நிறுவப்பட்ட

பெறுகை நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புகளுக்கு எந்த அளவிற்கு இணங்குகின்றன என்பதை இப்பிரிவு மேலும் மேற்பார்வை செய்து மதிப்பீடு செய்கிறது. இப்பிரிவுக்கு பணிப்பாளர் (கண்காணிப்பு) தலைமை தாங்குகிறார். அவர், பிரிவின் கட்டாயப் பணிகளை நிறைவேற்றுவதில் மூலோபாயத் தலைமையையும் ஒட்டுமொத்த வழிகாட்டுதலையும் வழங்குகிறார்.

1.5.4 பெறுகை விசாரணைப் பிரிவு

பெறுகை விசாரணைப் பிரிவானது நிறுவப்பட்ட நடைமுறைகளுக்கும் வழிகாட்டுதல்களுக்கும் புறம்பாக அரச நிறுவனங்களால் செய்யப்படும் பெறுகைகள் குறித்த அறிக்கைகளை விசாரிப்பதற்கும், அத்தகைய பெறுகைகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளை ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின்படி தேவையான நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிக்கையிடுவதற்கும் பொறுப்பாகும். உண்மை கண்டறியும் விசாரணைகள் மற்றும் விரிவான விசாரணைகள் என்ற வகையில் விசாரணைகள் இரண்டு வகைகளின் கீழ் நடத்தப்படுகின்றன. முறைப்பாட்டில் வழங்கப்பட்ட தகவல்கள், சம்பந்தப்பட்ட அமைச்சு அல்லது பெறுகை செய்யும் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் உண்மை கண்டறியும் விசாரணைகள் தொடங்கப்படுகின்றன. சிக்கலின் தன்மை மற்றும் பெறுகைச் செயன்முறையின் சிக்கலான தன்மையைப் பொறுத்து, ஒரு விரிவான விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. இதில், ஏலதாரர்களால் வழங்கப்படும் ஏலச் சமர்ப்பிப்புகள் உட்பட, தொடர்புடைய அனைத்து ஆவணங்களின் விரிவான மற்றும் விரிவான ஆய்வு அடங்கும். பெறுகைச் செயன்முறையின் முழுமையான மதிப்பீட்டை உறுதிசெய்வதே விரிவான விசாரணைகளின் நோக்கமாகும்.

இப்பிரிவு தனது கண்டுபிடிப்புகளை, பரிசீலனைக்குத் தேவையான ஆவணங்களுடன் விரிவான அறிக்கைகள் மூலம் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கிறது. நிறுவப்பட்ட நடைமுறைகளுக்குப் புறம்பாக நடத்தப்பட்ட பெறுகைகள் தொடர்பான அவதானிப்புகள், ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட்டபடி, சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சுச் செயலாளர் மற்றும் பிற பொருத்தமான அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

மேலும், பெறுகைச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளால், பெறுகை வழிகாட்டுதல்கள் மற்றும் கையேட்டில் இருந்து செய்யப்படும் மீறல்களைக் கண்டறிவதற்கு இந்தப் பிரிவு பொறுப்பாகும். அத்தகைய நிகழ்வுகள் உரிய நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனடியாகத் தெரிவிக்கப்படுகின்றன.

இப்பிரிவுக்கு பணிப்பாளர் (விசாரணை) தலைமை தாங்குகிறார். அவர், பிரிவின் கட்டாயப் பணிகளை நிறைவேற்றுவதில் மூலோபாயத் தலைமையையும் ஒட்டுமொத்த வழிகாட்டுதலையும் வழங்குகிறார்.

1.5.5 கணக்குப் பிரிவு

தேசிய பெறுகை ஆணைக்குழுவின் அலுவலகத்திற்குள் உள்ள அனைத்து நிதி, கணக்கியல் விடயங்கள், சொத்து முகாமைத்துவம் ஆகியவற்றைக் கண்காணிப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் கணக்குப் பிரிவு பொறுப்பாகும். இந்தப் பிரிவு நிதி அறிக்கைகளை துல்லியமாகப் பராமரித்தல், நிறுவப்பட்ட நிதி ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல், நிதிநிலை அறிக்கைகள் மற்றும் ஆணைக்குழுவின் நிதிமூலங்களை சிறப்பாக நிர்வகித்தல் ஆகியவற்றை உறுதி செய்கிறது. இந்தப் பிரிவுக்கு கணக்காளர் தலைமை தாங்குகிறார். அவர், பிரிவின் கட்டாயப் பணிகளைத் திறமையாகவும் திறம்படவும் நிறைவேற்றுவதை உறுதி செய்வதில் ஒட்டுமொத்த தலைமையையும் வழிகாட்டுதலையும் வழங்குகிறார்.

1.6 தேசிய பெறுகை ஆணைக்குழுவின் கீழ் வரும் நிறுவனங்கள்/ நிதிகள்

தேசிய பெறுகை ஆணைக்குழுவின் கீழ் எந்த நிறுவனங்களோ அல்லது நிதிகளோ செயல்படுவதில்லை. தேசிய பெறுகை ஆணைக்குழு திரட்டு நிதியத்தின் மூலம் மட்டுமே நிதியைப் பெறுகிறது. ஆணைக்குழு உறுப்பினர்களின் சம்பளத்திற்கான நிதி, வருடாந்த மதிப்பீட்டில் உள்ள விசேட சட்ட ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்படுகிறது.

1.7 வெளிநாட்டு நிதியுதவிக் கருத்திட்டங்கள் தொடர்பான தகவல்கள்

தேசிய பெறுகை ஆணைக்குழுவின் கீழ் எந்த வெளிநாட்டு நிதியுதவி கருத்திட்டங்களும் செயல்படவில்லை. இருப்பினும், தேசிய பெறுகை ஆணைக்குழு, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (UNDP) உதவியுடன் இலத்திரனியல் பெறுகைக் கண்காணிப்பு முறைமையை (ePMS) வடிவமைத்தல், நிறுவுதல், செயற்படுத்துதல் ஆகியவற்றில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்தக் கூட்டாண்மையின் ஆரம்பக் கட்டத்தின் ஒரு பகுதியாக, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 13 டெஸ்க்டொப் கணினிகள், 12 நோட்புக் கணினிகள், ஒரு உயர் செயல்திறன் கொண்ட பல்நோக்கு அலுவலக அச்சுப்பொறி மற்றும் 2 பல்நோக்கு நெட்வெர்க் அச்சுப்பொறிகள் உள்ளிட்ட அத்தியாவசிய தகவல் தொழில்நுட்ப சாதனங்களையும் உட்கட்டமைப்பையும் வழங்கியது. மேலும், ஆண்டு முழுவதும்

இலத்திரனியல் பெறுகைக் கண்காணிப்பு முறைமையின் (ePMS) செயற்படுத்தலை எளிதாக்குவதற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் திறன் அபிவிருத்தி ஆதரவை வழங்குவதாகவும் UNDP உறுதியளித்துள்ளது.

இலத்திரனியல் பெறுகைக் கண்காணிப்பு முறைமையின் ஆரம்ப கட்ட அபிவிருத்திப் பணிகளில் பெறுகைக் கண்காணிப்புப் பிரிவு குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளது. இந்த முறைமை, பெறுகைக் கண்காணிப்புச் செயல்முறையை நவீனமயமாக்கவும் தானியக்கமாக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது, தற்போதைய காகித அடிப்படையிலான முறைமையிலிருந்து ஒரு ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்புக்கு மாறுவதை எளிதாக்குகிறது. ஒரு மேம்பட்ட, ஊடாடும் இணைய அடிப்படையிலான தளமாக உருவாக்கப்பட்ட இதன் முழுமையான செயலாக்கம், 2026 ஆம் ஆண்டில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் செயல்திறன், பயனுடைமை மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக, அரச அதிகாரிகளுக்குப் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டை வழங்கும் வகையில், பொதுப் பெறுகை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) தாராளமாக உதவி வழங்கியது.

அத்தியாயம் 02

முன்னேற்றமும் கண்ணோட்டமும்

2.1 விசேட அடைவுகள், சவால்கள் மற்றும் வரவிருக்கும் இலக்குகள்
2.1.1 மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில், தேசிய பெறுகை ஆணைக்குழு 45 வழக்கமான வாராந்தக் கூட்டங்கள் உட்பட பலமுறை கூடியது. அக்கூட்டங்களில், அது பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடி, கொள்கைத் தீர்மானங்களை எடுத்ததுடன், பெறுகை தொடர்பான விடயங்களில் வழிகாட்டுதல்களையும் வழங்கியது. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில், 150 ஆணைக்குழுப் பத்திரங்கள், உடன்பாடுகள், தெளிவுபடுத்தல்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் கருத்துக்கள் தொடர்பான 520 விடயங்களும் ஆணைக்குழுவால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

தேசிய பெறுகை ஆணைக்குழு, பெறுகை தொடர்பான விடயங்கள் மற்றும் பெறுகை நடைமுறைகளில் செய்யப்பட வேண்டிய மேம்பாடுகள் குறித்து கலந்துரையாடுவதற்காக பல்வேறு அரச நிறுவனங்களுடனும் நிதி வழங்கும் முகவராண்மைகளுடனும் தொழில்முறைச் சங்கங்களுடனும் கூட்டங்களை நடத்தியது.

அரச அதிகாரிகளின் இயல்திறனை வளர்ப்பதற்கும், அரச பெறுகையில் அவர்களின் அறிவை மேம்படுத்துவதற்கும், தேசிய பெறுகை ஆணைக்குழுவால் ஆண்டு முழுவதும் தேசிய, மாகாண மற்றும் நிறுவன மட்டங்களில் தொடர் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

மேலும், பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகள் மீதான வரைவு வழிகாட்டுதல்கள்-2024 குறித்த கருத்துக்கள், யோசனைகள் மற்றும் பரிந்துரைகளைப் பெறுவதற்காக, அமைச்சரவை அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், நிதி வழங்கும் முகவராண்மைகள், சர்வதேச அரச சாரா ஒழுங்கமைப்புகள் (INGO’s) மற்றும் அரச பெறுகை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரச சாரா ஒழுங்கமைப்புகள் உள்ளிட்ட பங்கீடுபாட்டாளர்களுக்காக நான்கு(04) விசேட ஆலோசனை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அதன் பிறகு, முக்கிய பங்கீடுபாட்டாளர்களுடன் வரைவு வழிகாட்டுதல்களின் மேம்படுத்தப்பட்ட பதிப்பை இறுதி செய்வதற்காக இரண்டு(02) சரிபார்ப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மேற்கூறிய வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டவுடன், வழிகாட்டுதல்கள்-2024 உடன் தீவிர இணக்கத்தை உறுதிசெய்வதற்காக தேசிய, மாகாண மற்றும் நிறுவன மட்டங்களில் 16 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

மேலும், ஆணைக்குழு எதிர்கொண்ட அலுவலக இடப் பற்றாக்குறை என்ற கடுமையான சிக்கலைத் தீர்க்கும் வகையில், தற்போதுள்ள அலுவலகக் கட்டிடத்தை விரிவுபடுத்துதல், அருகிலுள்ள அரச கட்டிடத்தைப் பெறுதல் மற்றும் புதுப்பித்தல், தேவையான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை வாங்குதல் உள்ளிட்ட பௌதிக உட்கட்டமைப்பு மேம்பாடும் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

அட்டவணை 01

2025 ஆம் ஆண்டில் தேசிய பெறுகை ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட கூட்டங்களும் பயிலரங்குகளும்

மாதம்	ஆணைக்குழுக் கூட்டங்கள்	நிறுவனங்களுடனான சந்திப்புகள்	பயிலரங்குகள்	மொத்தம்
சனவரி	04	07	05	16
பெப்ரவரி	02	04	03	09
மார்ச்	04	07	02	13
ஏப்ரல்	04	02	02	08
மே	05	07	-	12
யூன்	04	05	01	10
யூலை	04	11	01	16
ஆகஸ்ட்	04	14	01	19
செப்டம்பர்	04	05	-	09

ஆக்டோபர்	04	10	02	16
நவம்பர்	03	03	03	09
டிசம்பர்	03	01	-	04
முழு மொத்தம்	**45**	**76**	**20**	**141**

இந்தத் திட்டங்கள், பெறுகை கொள்கை உருவாக்கத்தின் முன்னேற்றத்திற்கும், நிறுவன இயல்திறனை வலுப்படுத்துவதற்கும், அரச நிறுவனங்கள் முழுவதும் அறிவையும் சிறந்த பெறுகை நடைமுறைகளையும் மேம்படுத்துவதற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கின. ஆணைக்குழு தனது அரசியலமைப்பு ரீதியாக ஒப்படைக்கப்பட்ட ஆணையின்படி இந்த முன்முயற்சிகளைத் தக்கவைத்து விரிவுபடுத்துவதில் உறுதியாக உள்ளது.

2.1.2 சிறப்பான அடைவுகள்

2025 ஆம் ஆண்டில் பின்வரும் கொள்கை மற்றும் செயற்பாட்டு முயற்சிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன:

i. பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகளுக்கான பெறுகை வழிகாட்டுதல்கள் - 2024

தேசிய பெறுகை ஆணைக்குழுவானது, முன்னர் வெளியிடப்பட்ட "பொருட்கள் மற்றும் வேலைகளுக்கான பெறுகை வழிகாட்டுதல்கள் - 2006"-க்குப் பிறகு 19 ஆண்டுகள் கழித்து, "பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகளுக்கான பெறுகை வழிகாட்டுதல்கள்-2024"-ஐ 2025 சனவரி 1 முதல் மும்மொழிகளிலும் வெளியிட முடிந்தது. இந்தக் கையேடு, ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளிலும் வெளியிடப்பட்டது. இந்தக் கையேட்டின் தமிழ் பதிப்பிற்கான வரைவுப் பணிகளும் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் தொடங்கப்பட்டன.

செயற்படுத்தும் கட்டத்தின் போது, பெறுகை செய்யும் நிறுவனங்களால் எழுப்பப்பட்ட சிக்கல்களைத் தேசிய பெறுகை ஆணைக்குழு தெளிவுபடுத்தியது. இந்த வழிகாட்டுதல்களை வெளியிடுவதன் மூலம், தேசிய பெறுகை ஆணைக்குழு (NPC) பெறுகை முகாமைத்துவப் பிரிவுகள், ஏற்புக் குழுக்கள், மாறுதல் மீளாய்வுக் குழுக்கள், மேன்முறையீட்டுக் குழுக்கள் ஆகியவற்றை நிறுவுதல் உள்ளிட்ட புதிய ஏற்பாடுகளையும் கட்டமைப்பு மாற்றங்களையும் அறிமுகப்படுத்தியது. மேலும் மேன்முறையீடுகள், தடைகள், தகுதிநீக்கம் மற்றும் கறைநிரலிற் சேர்த்தல் ஆகியவற்றுக்கான புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதுதவிர, ஒரு புதிய ஒப்பந்த ஏற்பாடாக, கட்டமைப்பு ஒப்பந்தத்திற்கான ஏற்பாடுகள் இந்த வழிகாட்டுதல்களில் இணைக்கப்பட்டன. நிலைபேறான அரச பெறுகை, இலத்திரனியல் அரச பெறுகை மற்றும் தகவல் முறைமைகளின் பெறுகை ஆகியவற்றுக்கான ஏற்பாடுகள் இந்த வழிகாட்டுதல்களில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய முன்முயற்சிகளாகும்.

ii. ஆலோசகர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் பணியமர்த்துவதற்குமான பெறுகை வழிகாட்டுதல்கள்

ஆலோசகர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் பணியமர்த்துவதற்குமான தற்போதைய வழிகாட்டுதல்கள், தேசிய பெறுகை முகவராண்மையால் 2007-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன. இந்த வழிகாட்டுதல்கள் 2007-ஆம் ஆண்டிலிருந்து மாற்றமின்றி இருந்தன. மேலும், அவை மேம்படுத்தப்படவும் இல்லை. எனவே, ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாக, ஆணைக்குழு தற்போதைய போக்குகள் மற்றும் உலகளாவிய தாக்கங்களைக் கருத்திற்கொண்டு, தற்போதுள்ள வழிகாட்டுதல்களில் கண்டறியப்பட்ட இடைவெளிகளை நிரப்பி, ஆலோசகர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் பணியமர்த்துவதற்குமான பெறுகை வழிகாட்டுதல்களின் முதல் வரைவைத் தயாரித்தது. இதற்கு இணையாக, ஒரு விரிவான கையேடும் வரையப்பட்டு வருகிறது. மேலும், ஆலோசனைச் சேவைகளுக்கான புதிய தரநிலை பெறுகை ஆவணங்களை உருவாக்குவதற்கான முன்முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

iii. மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்கள் பெறுகை செய்வதற்கான வழிகாட்டுதல்கள்

2022ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட, மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்கள் பெறுகை செய்வதற்கான தற்போதைய வழிகாட்டுதல்கள், மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்களின் தொடர்ச்சியான மற்றும் தடையற்ற விநியோகத்தை போதுமான அளவு கவனத்திற் கொள்ளவில்லை. இந்தச் சூழ்நிலையில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆதரவுடன் 2024 ஆம் ஆண்டில் புதிய வழிகாட்டுதல்களை அறிமுகப்படுத்த தேசிய பெறுகை ஆணைக்குழு (NPC) முன்னோடி முயற்சிகளை மேற்கொண்டது. 2025ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சு, மருத்துவ வழங்கல் பிரிவுகள், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, அரச ஒசுசல, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் நிதி வழங்கும் முகவராண்மைகள் உள்ளிட்ட சுகாதாரத் துறையின் முக்கியப் பங்கீடுபாட்டாளர்களின் பங்கேற்புடன் கலந்தாலோசனை பயிலரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

iv. காணி கையுதிர்ப்புச் செய்வதற்கான வழிகாட்டுதல்கள்

அமைச்சரவையின் வேண்டுகோளின் பேரில், மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் காணிகளை கையுதிர்ப்புச் செய்வதற்கான வழிகாட்டுதல்களை வகுக்க தேசிய பெறுகை ஆணைக்குழு (NPC) முன்முயற்சிகளை எடுத்துள்ளது.

v. பகிரங்க பெறுகைச் சட்டமூலத்தைத் தயாரித்தல்

சர்வதேச நாணய நிதியத்துடனான (IMF) கலந்துரையாடல்களின் போது இலங்கை அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட உறுதிமொழிகளுக்கு இணங்க, பகிரங்க பெறுகைச் சட்டமூலத்தின் வரைவைத் தயாரிக்கும் பொறுப்பை நிதி அமைச்சு தேசிய பெறுகை ஆணைக்குழுவிடம் (NPC) ஒப்படைத்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவுடன், இந்தச் சட்ட வரைவுப் பணியை மேற்கொள்வதற்காகத் தகுதிவாய்ந்த உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆலோசகர்களின் சேவைகள் பெறப்பட்டன. அதன்படி, பகிரங்க பெறுகைச் சட்டமூலத்தின் வரைவு தயாரிக்கப்பட்டது. மேலும், சட்ட வரைவைப் பாராளுமன்றத்தில் முறைப்படி சமர்ப்பிப்பதற்கு முன்னர் அதனை மீளாய்வு செய்தல், செம்மைப்படுத்துதல், இறுதி செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக, அமைச்சரவை அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், நிதி வழங்கும் முகவராண்மைகள், சர்வதேச அரச சாரா ஒழுங்கமைப்புகள் (INGO's) மற்றும் அரச சாரா ஒழுங்கமைப்புகள் (NGO's) உள்ளிட்ட பங்கீடுபாட்டாளர்களுடன் கருத்துக்கள், யோசனைகள் மற்றும் ஆலோசனைகளைப் பெறுவதற்காகக் கட்டமைக்கப்பட்ட ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

vi. ஒப்பந்த முகாமைத்துவ வழிகாட்டுதல்களை உருவாக்குதல்

ஒப்பந்த முகாமைத்துவத்துக்கான வழிகாட்டுதல்களை உருவாக்க தேசிய பெறுகை ஆணைக்குழு (NPC) முன்முயற்சிகளை எடுத்துள்ளது. மேலும் 2025ஆம் ஆண்டில் ஆலோசகர்களால் சமர்ப்பிக்கப்பட்ட வரைவை மீளாய்வு செய்ய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

vii. மேலதிக கொள்கை முன்முயற்சிகள்

- மாகாண சபைகளுக்கு ஏற்ப பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகளுக்கான பெறுகை வழிகாட்டுதல்கள் - 2024-க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- தரநிலை ஏல ஆவணங்களை (SBD) உருவாக்கி வெளியிடுவதற்கான முன்முயற்சி.
- கட்டமைப்பு ஒப்பந்தம், ஆயுள் சுழற்சி செலவினம், பெறுகை முகாமைத்துவப் பிரிவை நிறுவுதல் உள்ளிட்ட வழிகாட்டுதல் குறிப்புகளை உருவாக்குவதற்கான முன்முயற்சிகள் மற்றும்
- ஏலதாரர்களுக்கான வழிகாட்டியை உருவாக்குவதற்கான முன்முயற்சிகள்.

viii. பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி

தேசிய பெறுகை ஆணைக்குழு (NPC), பொது அதிகாரிகளுக்கு விரிவான பயிற்சிகளை வழங்கவும், திறன் அபிவிருத்தித் திட்டங்களை நடத்தவும் உறுதிபூண்டுள்ளது. செயல்திறன் மற்றும் பயனுடைமையை மேம்படுத்துதல், பெறுகைக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்தல் ஆகியன இதன் முதன்மை நோக்கங்களாகும். பயிற்சித் தேவைகள் பொதுவாக கொள்கை, கண்காணிப்பு மற்றும் விசாரணைகள், பணிப்பகங்களினால் கூட்டாக அடையாளம் காணப்படுகின்றன. ஆணைக்குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்ட வழக்குகள், பின்னர் பொருத்தமான பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தித் திட்டங்களை வடிவமைத்து நடத்துவதற்காக கொள்கைப் பணிப்பகத்திற்குப் பரிந்துரைக்கப்படுகின்றன.

மீளாய்வுக்கு உட்பட்ட காலத்தில், பயிற்சிப் பொருட்கள் தேசிய பெறுகை ஆணைக்குழுவால் (NPC) உருவாக்கப்பட்டன. மேலும், பயிற்றுநர்களுக்கான பயிற்சி (TOT) திட்டங்களின் தொடர் வடிவமைக்கப்பட்டு, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் நாடு முழுவதும் உள்ள அனைத்து மாகாணங்களையும் மாவட்டங்களையும் உள்ளடக்கி நான்கு(04) நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

பெறுகை வழிகாட்டுதல்கள்-2024 (பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகள்) மீது நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

இல.	நிகழ்ச்சித் திட்டம்	இலக்குக் குழு	பங்கேற்பாளர்கள் எண்ணிக்கை	திகதி
01	பெறுகை வழிகாட்டுதல்கள்-2024-க்கான அறிமுகம் (பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகள்)	வட மத்திய மாகாண சபை, மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் வட மத்திய மாகாணத்தில் உள்ள பிற அரச நிறுவனங்களின் அதிகாரிகள்		2025.01.15
02	-மேற்கண்டவாறே-	அமைச்சுக்கள், திணைக்களங்களின் அதிகாரிகள், மேல் மாகாண சபை, மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் மேல் மாகாணத்தில் உள்ள பிற அரச நிறுவகங்களின் அதிகாரிகள்		2025.01.17
03	-மேற்கண்டவாறே-	தென் மாகாண சபை, மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் தென் மாகாணத்தில் உள்ள பிற அரச நிறுவகங்களின் அதிகாரிகள்		2025.01.28
04	-மேற்கண்டவாறே-	ஊவா மாகாண சபை, மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் ஊவா மாகாணத்தில் உள்ள பிற அரச நிறுவகங்களின் அதிகாரிகள்		2025.02.10
05	-மேற்கண்டவாறே-	மத்திய மாகாண சபை, மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் மத்திய மாகாணத்தில் உள்ள பிற அரச நிறுவகங்களின் அதிகாரிகள்		2025.02.18
06	-மேற்கண்டவாறே-	வடமேல் மாகாண சபை, மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் வடமேல் மாகாணத்தில் உள்ள பிற அரச நிறுவகங்களின் அதிகாரிகள்		2025.02.24
07	-மேற்கண்டவாறே-	கிழக்கு மாகாண சபை, மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள பிற அரச நிறுவகங்களின் அதிகாரிகள்		2025.03.04
08	-மேற்கண்டவாறே-	சப்ரகமுவ மாகாண சபை, மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள பிற அரச நிறுவகங்களின் அதிகாரிகள்		2025.03.18
09	-மேற்கண்டவாறே-	வடக்கு மாகாண சபை, மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் வடக்கு மாகாணத்தில் உள்ள பிற அரச நிறுவகங்களின் அதிகாரிகள்		2025.04.08
10	புதிய வழிகாட்டுதல்கள்-2024 அடிப்படையிலான பகிரங்க பெறுகை குறித்த விழிப்புணர்வு,	நிதி அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளர்கள்		2025.07.29

11	-மேற்கண்டவாறே-	கல்வி அமைச்சு மற்றும் அதன் கீழ் வரும் நிறுவகங்களின் சிரேஷ்ட அதிகாரிகள்		2025.08.01
12	-மேற்கண்டவாறே-	பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் வரும் நிறுவகங்களின் சிரேஷ்ட அதிகாரிகள்		2025.08.15
13	-மேற்கண்டவாறே-	கல்வி அமைச்சு மற்றும் அதன் கீழ் வரும் நிறுவகங்களின் சிரேஷ்ட அதிகாரிகள்		2025.08.15
14	-மேற்கண்டவாறே-	கம்பஹா மாவட்டத்தில் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் சிரேஷ்ட அதிகாரிகள்		2025.09.09
15	-மேற்கண்டவாறே-	இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் அதன் கீழ் வரும் நிறுவகங்களின் சிரேஷ்ட அதிகாரிகள்		2025.09.17
16	-மேற்கண்டவாறே-	நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் வரும் நிறுவகங்களின் சிரேஷ்ட அதிகாரிகள்		2025.02.01
17	சனாதிபதி செயலகத்தில் முக்கிய கருத்திட்டங்களுக்கு உரிய பெறுகைச் செயற்பாடுகள்	நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட அமைச்சுக்களின் சிரேஷ்ட அதிகாரிகள்		2025.06.15
	நடைபெற்ற மொத்த நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை : 17			

பயிற்றுநர்களுக்கான பயிற்சி (TOT) நிகழ்ச்சிகள் - 2025

இல.	இடம்	பிராந்தியம்	திகதிகள்
01	நுவரெலியா	மத்திய மாகாணம்	அக்டோபர் 09 – 10, 2025
02	ஹபறணை	வுடமத்திய மாகாணம்	நவம்பர் 10 – 11, 2025
03	களுத்துறை	மேல் மாகாணம்	நவம்பர் 17-18, 2025
04	திருகோணமலை	கிழக்கு மாகாணம்	நவம்பர் 24-25, 2025
நடத்தப்பட்ட பயிற்றுநர்களுக்கான மொத்த நிகழ்ச்சிகள் : 04			

மொத்த பயிற்சி நடவடிக்கைகளின் சுருக்கம்

நிகழ்ச்சி வகை	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை
விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் - பெறுகை வழிகாட்டுதல்கள் 2024	16
பயிற்றுநர்களுக்கான பயிற்சி (TOT) திட்டங்கள்	04
மொத்தம்	**20**

x. இலத்திரனியல் பெறுகைக் கண்காணிப்பு முறைமையின் (ePMS) அபிவிருத்தியும் இயக்கமும்

2025 ஆம் ஆண்டில், கண்காணிப்புப் பிரிவின் முதன்மைக் கவனம் கைமுறை அடிப்படையிலான பெறுகைக் கண்காணிப்பு நடவடிக்கைகளிலிருந்து இலத்திரனியல் பெறுகைக் கண்காணிப்பு முறைமையின் (ePMS) செயற்பாடு மற்றும் முன்னோடி செயற்படுத்தலுக்கு மாறியது. இந்த மூலோபாய மாற்றம் பகிரங்க பெறுகைக் கண்காணிப்பில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், செயல்திறன் மற்றும் விளைதிறனை வலுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறித்தது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துடன் (UNDP) பூர்வாங்க கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, ePMS-ன் அபிவிருத்திக்காக தேசிய பெறுகை ஆணைக்குழுவுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவு நீட்டிக்கப்பட்டது. மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் இருந்து தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் மற்றும் சிஸ்டம் டெவலப்பர் ஒருவரும் தேசிய பெறுகை ஆணைக்குழு சார்பாக UNDP வழங்கியது. அதிகாரபூர்வ டொமைன் "epms.nprocom.gov.lk" ஆனது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையின் (ICTA) மூலம் பதிவுசெய்யப்பட்டது. மேலும் இந்த அமைப்பு செப்டம்பர் 2025 இல் நேரலை செய்யப்பட்டது. ஆரம்பத்தில், ஒரு முன்னோடித் திட்டமாக, ePMS ஆனது இருபத்தைந்து (25) அமைச்சுக்கள் மற்றும் இருபத்தொரு (21) விசேட செலவின அலகுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

அட்டவணை 1 — 2025-இல் நடத்தப்பட்ட ePMS பயிற்சித் திட்டம்

இல.	திகதி	பயிற்சித் திட்டம்	இலக்குக் குழு	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை
01.	2025.03.12	UNDP தலைமையகத்தில் ePMS குறித்த அறிமுகப் பயிலரங்கம்	NPC அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள்	13
02	2025.06.13	ePMS குறித்த அறிமுகப் பயிலரங்கம்	பெறுகையில் ஈடுபட்டுள்ள அமைச்சு அதிகாரிகள் (பகுதி I — 12 அமைச்சுக்கள்)	56
03.	2025.06.20	ePMS குறித்த அறிமுகப் பயிலரங்கம்	பெறுகையில் ஈடுபட்டுள்ள அமைச்சு அதிகாரிகள் (பகுதி II — எஞ்சிய 12 அமைச்சுக்கள்)	58
04.	2025.07.09	ePMS குறித்த அறிமுகப் பயிலரங்கம்	பெறுகையில் ஈடுபட்டுள்ள விசேட செலவீட்டுப் பிரிவு அதிகாரிகள்	58
05.	2025.09.09	ePMS-க்கான ஒருங்கிணைப்பு அதிகாரிகளுக்கான பயிற்சி	அமைச்சுக்கள் மற்றும் விசேட செலவீட்டுப் பிரிவுகளின் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகள்	48

xi. ePMS உதவி நிலையத்தை (Help Desk) நிறுவுதல்

பங்கேற்கும் நிறுவனங்களுக்குத் தொடர்ச்சியான தொழில்நுட்ப மற்றும் செயற்பாட்டு ஆதரவை வழங்குவதற்காக, NPC அலுவலகத்தில் ஒரு ePMS உதவி நிலையம் நிறுவப்பட்டது. இந்த உதவி நிலையம், கணினி அமைப்பு தொடர்பான தொழில்நுட்பச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், வேலைப்பாய்ச்சல் நடைமுறைகளைத் தெளிவுபடுத்துவதற்கும், உள்நுழைவு உருவாக்கத்திற்கு உதவுவதற்கும், கடவுச்சொல் முகாமைக்கும், மற்றும் தரவு உள்ளீடு குறித்த வழிகாட்டுதலுக்கும் உதவுகிறது. இந்தத் திட்டத்தின் முன்னோட்ட வெளியீட்டைத் தொடர்ந்து, பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்து 200-க்கும் மேற்பட்ட ஆதரவுக் கோரிக்கைகளை இந்த உதவி நிலையம் பெற்றது.

xii. ePMS-இன் முன்னோடிச் செயலாக்கம் (Pilot Implementation)

ePMS-இன் முன்னோடிக் கருத்திட்டம், 2025 செப்டம்பர் 16 அன்று நடத்தப்பட்டது. மொத்தம் 24 அமைச்சுக்களும் 21 விசேட செலவீட்டு அலகுகளும் இந்த முறைமையில் இணைக்கப்பட்டன. இந்த முன்னோட்டக் கட்டத்தில், முதன்மை பெறுகைத் திட்டம் (MPP) சமர்ப்பித்தல், ஆண்டு உத்தேச பெறுகைத் திட்டம் (APPP) சமர்ப்பித்தல், விரிவான ஆண்டு பெறுகைத் திட்டம் (DAPP) சமர்ப்பித்தல் மற்றும் வேலைப்பாய்ச்சல் ஒப்புதல்கள் ஆகியவை இந்த அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 2 — ePMS முன்னோடிச் செயலாக்க நிலை (2025.12.31 இல் உள்ளவாறு)

தொடர் இல.	விபரம்	நிறுவனங்களின் எண்ணிக்கை
01	இணைக்கப்பட்ட மொத்த அமைச்சுக்கள்	24
02	இணைக்கப்பட்ட மொத்த விசேட செலவீட்டு அலகுகள்	21
03	DAPP (செயன்முறை ஆரம்ப இறுதிப்புள்ளி) ஐ நிறைவுசெய்த அமைச்சுக்கள்	02
04	DAPP (செயன்முறை ஆரம்ப இறுதிப்புள்ளி) ஐ நிறைவுசெய்த விசேட செலவீட்டு அலகுகள்	08
05	தற்போது செயற்பாட்டில் உள்ள அமைச்சுக்கள்	22
06	தற்போது செயற்பாட்டில் உள்ள விசேட செலவீட்டு அலகுகள்	13

xiii. தேசிய பெறுகை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/2025 வெளியீடு

தேசிய பெறுகை ஆணைக்குழு, பெறுகைத் திட்டங்களைத் தயாரிப்பதற்காக 2025 டிசம்பர் 30 ஆம் திகதிய, சுற்றறிக்கை இல. 01/2025-ஐ வெளியிட்டது. இது, 2026 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டங்களை அனைத்து அரச நிறுவனங்களும் தயாரிக்க வேண்டும் என்பதைக் கட்டாயமாக்குகிறது.

xiv. அரச நிறுவனங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் முறையீடுகளைக் கையாளுதல்

தேசிய பெறுகை ஆணைக்குழுவின் பெறுகை விசாரணைப் பிரிவு, பெறுகை வழிகாட்டுதல்கள், கையேடுகள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளிலிருந்து விலகி, பெறுகை செய்யும் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் குறித்து ஏலதாரர்கள், சாத்தியமான ஏலதாரர்கள் மற்றும் பிற பங்கீடுபாட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட முறையீடுகள் மீதான விசாரணைகளை நடத்தியது.

2025 ஆம் ஆண்டில், தேசிய பெறுகை ஆணைக்குழுவுக்கு (NPC) அனுப்பப்பட்ட மொத்தம் 135 முறைப்பாடுகள் பெறுகை விசாரணைப் பிரிவால் கையாளப்பட்டன. எண்பத்தேழு(87) முறைப்பாடுகளுக்கு உண்மை கண்டறியும் விசாரணைகள் முடிக்கப்பட்டன. மேலும் ஆணைக்குழுவின் முடிவுகள் தேவையான நடவடிக்கை மற்றும் இணக்கத்திற்காக சம்பந்தப்பட்ட தரப்பினருக்குத் தெரிவிக்கப்பட்டன. மீதமுள்ள நாற்பத்தெட்டு(48) முறைப்பாடுகளுக்கான தொடர்புடைய விவரங்கள் மற்றும் ஆவணங்கள் அந்தந்த அமைச்சுக்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன. மேலும், இந்த முறைப்பாடுகள், 2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறு விசாரணையில் இருந்தன.

2.1.3 சவால்கள்

அரசியலமைப்பில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளவாறு, தேசிய பெறுகை ஆணைக்குழு அதன் நியதிச்சட்ட பணிகளை நிறைவேற்றுவதில் பல குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கிறது:

